2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

241—

துணை மின் நிலையம்

***54747—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், புச்சிரெட்டிபள்ளி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், புச்சிரெட்டிபள்ளி கிராமத்திற்கு, கே.ஜி. கண்டிகை 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது கே.ஜி. கண்டிகை 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகள் உள்ளன. மின்மாற்றிகளின் உச்ச மின் பளு 15.85 எம்.வி.ஏ. ஆகும். பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில்கொண்டு, கே.ஜி. கண்டிகை 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 110/33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, 110/33 கிலோ வோல்ட் 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி அமைக்கப்பட்டு, 13-8-2015 முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

2015 செப்டம்பர் 14]

மேலும், 110/33 கிலோ வோல்ட் 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி மற்றும் 33/11 கிலோ வோல்ட் 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் அமைக்கும் பணிகள் அடுத்த மாதம் இறுதிக்குள் முடிவடையும்.

திருத்தணி தொகுதி, புச்சிரெட்டிபள்ளியின் வருடாந்திர மின் பளுவின் வளர்ச்சி 0.4 எம்.வி.ஏ. ஆகும். எனவே, 33/11 கிலோ வோல்ட் 3 X 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளே, வரும் பத்து ஆண்டுகளுக்குப் போதுமானதாகும். எனவே, திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், புச்சிரெட்டிபள்ளி கிராமத்திற்குத் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டை எல்லாத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய குறிக்கோள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதும், அதைச் சாதிப்பதுவுமே மாண்புமிகு அம்மா அவர்களுடைய செயலாகும்.

தமிழகத்தில் தொழில் துறை சார்பில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி, தமிழகத்தை முதலீட்டாளர்களின் சொர்க்க பூமியாக்கி வரலாறு படைத்த, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நூற்றாண்டின் இணையற்ற Hero தாங்கள்தான் அம்மா! கம்பராமாயணத்தில், கம்பநாடன் ஓர் உவமையைச் சொல்வார், 'உலகத்திலேயே மிக வேகமானது நினைக்கின்ற நினைப்புதான்.' அதனைவிட வேகம் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு. (மேசையைத் தட்டும் ஒலி) இலக்கு ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீடு. பெற்ற முதலீடோ 2 இலட்சத்து, 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் தாங்கள்தான் அம்மா, இந்த நூற்றாண்டின் Hero. அம்மா, நீங்கள் பிறந்த பிப்ரவரி மாதமே Hero-க்கள் பிறந்த மாதம்தான். அம்மா, தாங்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான்

[2015 செப்டம்பர் 14

ஆபிரகாம் லிங்கன், உ.வே. சுவாமிநாத அய்யர், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் முதலான சமூக மறுமலர்ச்சி Hero-க்கள் பிறந்தார்கள். அதுமட்டுமல்ல; தாங்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான் புகழ் பெற்ற, உலகம் போற்றும் விஞ்ஞானிகள் டார்வின், தாமஸ் ஆல்வா எடிசன், கலிலியோ முதலானோர் பிறந்துள்ளனர். அம்மா, தாங்கள் பிறக்கும்போதே ஒரு Hero-வாகத்தான் பிறந்தீர்கள் அம்மா!

முற்பகல் 10-05

ஒரு நாட்டின் பண்பாட்டையும், கலாசாரத்தையும், மொழியையும், போற்றிப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் திருக்கோயில்களே! அம்மா, தங்களின் ஆட்சியில்தான் இறை வழிபாடும், ஆன்மிகமும் தழைத்தோங்குகிறது; கோயில்களில், மூன்று கால பூஜையும், அன்னதானமும் நடைபெற்று, நாடெங்கும் தெய்வீக மணம் வீசுகிறது. ஆன்மிகத் துறையிலும் தாங்கள்தான் Hero அம்மா!

அதுமட்டுமல்ல; அம்மா, வாழ்ந்து, மறைந்த, மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் வள்ளல்களை வரலாறு மூன்றாகப் பிரிக்கிறது. முதலாவதாக, முதலேழு வள்ளல்கள் எனப் பிரிக்கிறது; இவர்கள் கேட்காமலேயே பொருளைத் தந்தவர்கள்; இவர்கள் குமணனும் மற்ற ஆறு வள்ளல்களும் ஆவார்கள். இரண்டாவதாக, இடையேழு வள்ளல்கள் எனப் பிரிக்கிறது; இவர்கள் கேட்பவர்களுக்கு மட்டும் பொருளைத் தந்தவர்கள். இவர்கள் அக்ருவன், அரிச்சந்திரன் போன்றோர் ஆவார்கள். மூன்றாவதாக, கடையேழு வள்ளல்கள் எனப் பிரிக்கிறது; இவர்கள் புகழுக்காகப் பொருளைத் தந்தவர்கள்; பாரி, பேகன் முதலானோர் ஆவார்கள். அம்மா, இந்த நூற்றாண்டில் முதல், இடை, கடை ஏழு வள்ளல்களுக்கு அடுத்தபடியாக, எட்டாம் வள்ளலாக பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திகழ்கிறார்கள். அவருக்கு அடுத்தபடியாக இந்நூற்றாண்டில் தலைசிறந்த முதல், இடை, கடையேழு, எட்டாம் வள்ளலுக்கு அடுத்தபடியாக, ஒன்பதாம் வள்ளலாக, வள்ளல்களின் Hero-வாகத் திகழ்பவர் தாங்கள்தான் அம்மா!

அதுமட்டுமல்ல; அம்மா, நீங்கள், "அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்" என்ற 16 பரிசுப் பொருட்கள் அடங்கிய பெட்டகத்தை பிறந்தவுடனேயே குழந்தைக்குப் பரிசாகக்

2015 செப்டம்பர் 14]

கொடுக்கிறீர்கள். அந்தக் குழந்தை பரிசுப் பொருள் வேண்டுமென்று கேட்டதா? தாய்தான் பரிசுப் பொருள் வேண்டும் என்று கேட்டார்களா? அம்மா, யாரும் கேட்காமலேயே பரிசுப் பெட்டகத்தைத் தாங்கள் கொடுக்கின்றீர்கள். படிக்கும் பிள்ளைகளுக்கு, சீருடை, காலணி முதல் கணினி வரை கேட்காமலேயே வழங்கும் வள்ளல்தான் நீங்கள் அம்மா! தாய் வீட்டுச் சீதனமாய், பெண்களுக்குத் தாலிக்குத் தங்கம் முதல், தாய்மார்களுக்கு வளைகாப்பு வரை எல்லாவற்றையும் கேட்காமலேயே வழங்கும் வள்ளல் தாங்கள்தான் அம்மா! இன்னும் எத்தனையோ எண்ணிடலங்கா. அதனால் முதல், இடை, கடையேழு, எட்டாம் வள்ளல்களுக்கு அடுத்தபடியாக, வாழும் வள்ளல், வள்ளல் Hero நீங்கள்தான் அம்மா. அம்மா அவர்கள் பல்லாண்டு வாழ்க என இறைவனை வேண்டி, வள்ளல் Hero அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, புச்சிரெட்டிபள்ளி கிராமத்தைச் சுற்றி ஏறக்குறைய 30-க்கும் மேற்பட்ட சிறு கிராமங்கள் இருக்கின்றன. அக்கிராம மக்கள் விவசாயத்தையும், நெசவுத் தொழிலையும் நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலைச் செய்வதற்குத் தடையில்லா மின்சாரம் கிடைத்தாலும்கூட, போதிய, சீரான மின்சாரம் கிடைப்பதற்குத் தடை ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்தபோது, "கேஜி. கண்டிகையிலுள்ள துணை மின் நிலையத்தை விரிவுபடுத்தி, தரமுயர்த்தி அந்தப் பகுதிக்குச் சீரான மின்சாரம் கிடைப்பதற்கு வகை செய்யப்படும்" என்று கூறினார்கள். அதற்காக, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளில், சென்னை, ரெட்டை ஏரி பகுதியை ஒட்டியுள்ள புத்தகரம், விநாயகபுரம், இலட்சுமிபுரம், டீச்சர்ஸ் காலனி, வில்லிவாக்கம் ரோடு, சூரப்பேட்டின் ஒரு பகுதி, வேலம்மாள் கல்லூரியின் பின் பகுதி போன்ற பகுதிகள் சுமார் 20 மடங்குக்குமேல் விரிவாக்கம் அடைந்திருக்கின்றன.

அதனால், அங்கு வீடுகள் அதிகம் வந்துவிட்டன. முன்பு, அப்பகுதியிலுள்ள மக்களுக்கு அகரம் பகுதியிலுள்ள பெரம்பூர் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. அப்போது குறைவான வீடுகள் இருந்ததால், மின்சாரம் போதுமானதாக இருந்தது. தற்போது வடபெரும்பாக்கம் என்ற துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. அங்கு வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், கல்யாண மண்டபங்கள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், voltage drop ஆகிறது; சீரான மின்சாரம் கிடைக்கவில்லை; எப்படிப் பார்த்தாலும், ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று மணி நேரம் மின் விநியோகம் தடைபடுகிறது. அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைத்தால்தான், மின் விநியோகத்தைச் சீர் செய்ய முடியும் என்று அதிகாரிகளே வருத்தத்தோடு தெரிவிக்கிறார்கள். ஆகவே, வளர்ச்சி அடைந்த அந்தப் பகுதிக்குக் குறைந்தழுத்தம் மற்றும் மின்சாரம் சீராக வராததைத் தவிர்க்க, ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "எந்தெந்த பகுதிகளில் குறைந்தழுத்த மின் விநியோகம் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து, அக்குறைபாடுகளையெல்லாம் தமிழ்நாடு மின்சார வாரியம் உடனடியாகச் சீர் செய்ய வேண்டும்" என்று ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், இன்றைக்குப் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வளர்ச்சியடைந்து வரும் சென்னை புறநகர்ப் பகுதிகளில், குறிப்பாக வில்லிவாக்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நாளுக்குநாள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, மின் பளு தேவை அதிகரித்து வருகிறது. நாளுக்குநாள் மின் பளு தேவை அதிகரித்து வருகின்ற காரணத்தினால், சில இடங்களில் மின் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இதைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் அப்போதைக்கப்போது உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது. கூடுதல் மின்மாற்றிகள் அமைப்பதன்மூலம் மட்டும் குறைந்த மின் அழுத்தப் பிரச்சினையை, அதாவது, மின் பற்றாக்குறைப் பிரச்சினையைச் சரிசெய்ய முடியும் என்றால், புதிய மின்மாற்றிகளை அமைத்து அதைச் சரிசெய்து விடலாம். ஆனால், ஒட்டுமொத்தமாக, புதிய மின்மாற்றிகள் மட்டுமல்ல, புதிய மின் விநியோக மின்மாற்றிகள் மட்டுமல்ல; புதிய துணை மின் நிலையம் அமைத்துத்தான் அந்தப் பகுதியில் மின் பற்றாக்குறைப் பிரச்சினையை சீர்செய்ய முடியும் என்று சொன்னாலும், அதையும் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு அதற்கான நடவடிக்கைகளை உறுதியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ரீத்தாபுரம் பேரூராட்சியில் செம்பன்விளை பகுதியிலே ஏற்கெனவே துணை மின் நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கே சரியான மின் அழுத்தம் இல்லாத காரணத்தால், உதவிகரமாக மற்றொரு துணை மின் நிலையம் தேவையென்ற காரணத்தினால், அங்குள்ள பஞ்சாயத்தார் எல்லாம் சேர்ந்து ஏற்கெனவே அரசுக்கு 2½ ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். இதுவரை, துணை மின் நிலையம் அமைக்கப்படவில்லை. அந்தத் துணை மின் நிலையம் எப்பொழுது அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதிய துணை மின் நிலையம் தேவைப்படுகின்ற இடங்களெல்லாம் ஆய்வு செய்யப்படுகின்றன. பின்னர் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக்*

கழகம் எடுத்து வருகிறது. ஆனால், இதில் ஒன்றை மட்டும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். துணை மின் நிலையங்கள் அமைக்கும்போது, நிலங்களைக் கையகப்படுத்துவதில் சிரமம் ஏற்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் புதியதாகத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு, நிலம் கையகப்படுத்தும் பணிகளைச் செய்வது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உரிய ஆய்வுகளை மேற்கொள்ளும். தேவை ஏற்படின், அந்தப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் ஏற்பட்டால், தேவையான நிலம் கண்டறியப்பட்டு, கையகப்படுத்தப்பட்டு, அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

242—

உலர்களம்

***42941—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, அதிரான்விடுதி ஊராட்சி, கீழமஞ்சக்கரை மற்றும் வடக்குப்பட்டியில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, அதிரான்விடுதி ஊராட்சியில் உலர்களம் உள்ளது. அந்த ஊராட்சியின்